# மக்கள் மறுவாழ்வு

மலர்: 5 | ஐப்பசி-அக்டோபர் 1986 | விலை 75 காசுகள் | இதழ்: 1


## 'மறுவாழ்வு அளிக்கமுடியவில்லை' என்று ஆந்திர அரசு

# கைவிரிப்பு!

**"இலங்கையிலிருந்து தாயகம் திரும்பி மறுவாழ்வு மூலம் குடியமர்த்தப்பட்டுள்ள பல தாயகம் திரும்பியோருக்கு தம்மால் உரிய மறுவாழ்வினை அளிக்க முடியாது இருக்கிறது."**

இவ்வாறு ஆந்திர பிரதேச அரசு மத்திய அரசு மறுவாழ்வு துறைக்கு எழுதியுள்ளது என நம்பகமான செய்திகள் தெரிவிக்கின்றன.

சிறிமாவோ- சாஸ்திரி ஒப்பந்தத்தின் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பும் மக்களை தமிழகத்தில் மட்டுமல்லாது ஆந்திரா, கர்னாடகம், கேரளம் முதலான மாநிலங்களிலும் குடியமர்த்தப்பட்டு வருகிறார்கள். மேற்படி தமிழகம் தவிர்ந்த மூன்று மாநிலங்களில் சுமார் 4,000 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

ஆந்திரப் பிரதேசத்திலேயே அதிகமானவர்கள் குடியமர்த்தப்பட்டுள்ளனர் அங்கே இவர்களுக்கு நூற்பாலைகள், பவர்லூம் தொழிலகங்கள், காப்பித் தோட்டங்கள் ஆகியவற்றில் வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு வேலை வாய்ப்புகள் அளிக்கப்பட்டாலும், எங்கே வாய்ப்பு அளிக்கப்பட்டதோ அந்த தொழில் நிறுவனங்கள் நிர்மான வேலை கூட சில இடங்களில் முடியவில்லை. சில தொழிற்சாலைகளில் வேலைகளே வருடக்கணக் காலத்தில் தொடங்கப்படவில்லை. நிர்வாக முறை-தகுந்த தொழில் நுட்பம் தெரிந்வர்கள்- தகுதி வாய்ந்த அதிகாரிகள் இல்லாததால் விசைத்தறிகள் போன்ற தொழில்கள் செயல்பட முடியாமலே இருக்கிறது.

இது போன்ற காரணங்களால், நெல்லூர், சத்தியவேடு முதலான இடங்களுக்கு சென்ற தாயகம் திரும்பியோர் எந்த தொழிலும், போதிய சம்பளமும் இல்லாது அவதிப்படுகிறார்கள்.

சத்தியவேடு என்ற இடத்தில் தொடர்ந்து அவர்களுக்கு வாழ்வளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாம். அங்கே 42 தாயகம் திரும்பிய குடும்பங்கள் இருக்கின்றன இவர்களுக்கு சித்தூர்மாவட்ட ஆட்சியாளர், 20 மாடுகள் வளர்க்க ஏற்பாடுகள் செய்கிறோம் என்று தெரிவித்திருக்கிறார். 42 குடும்பங்கள் 20 மாடுகள் வைத்து எப்படி பிழைப்பு நடத்த முடியும்?

ஆந்திராவில் குடியமர்த்தப்பட்டவர்களில், சிரளா, குண்டக்கல், கரிம் நகர், ராஜமுந்திரி போன்ற மிகச் சில இடங்களில் குடியமர்த்தப்பட்டு வேலை வாய்ப்பு பெற்றவர்கள்மட்டுமே ஓரளவிற்கு உரிய மறுவாழ்வை பெற்றிருக்கிறார்கள் சாத்தவாகனா, நெல்லூர், சத்திவேடு, சுண்ட பள்ளி முதலான பல இடங்களில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் மிகுந்த சிரமங்களுக்கு உட்பட்டே இருக்கிறார்கள்.

அங்கே அவர்கள் தங்கள் வாழ்வு சரிவர அமையாததால் தமிழ்நாட்டிற்கு வருவதும், மறுவாழ்வுத் துறையிடம் மாற்று வேலை கேட்பதும், உண்ணாவிரதம் போன்ற போராட்டங்கள் நடத்துவதும் அடிக்கடி நிகழும் நிகழ்ச்சிகளாகும்.

இவ்வாறு தகுந்த மறுவாழ்வு உதவிகள் கிடைக்கவழி-உடனடியாக மாற்றுதவி அளிக்கப்பட வேண்டிய பல தாயகம் திரும்பியக் குடும்பங்கள் இருக்கிறார்கள்.

பல்வேறுபட்ட பிரச்சனைகளில், இவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் அளிக்க தங்களுக்கு சாத்தியமில்லை-அதனால் இவர்களை பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டுமென்று ஆந்திர அரசு மத்திய அரசுக்கு எழுதி விட்டதாக நம்பகமான செய்தி.

இதைத் தொடர்ந்து மத்திய அரசும், இவர்களுக்கு மாற்றுதவி வழங்கி தமிழகத்திலேயே மறு வாழ்வு அளிக்க வேண்டும் என தமிழக அரசைக் கேட்டுக் கொண்டுள்ளதாக தெரிகிறது.

தற்போது தமிழ்நாட்டில் தாயகம் திரும்பியோருக்காக வாய்ப்பளிக்க எழுபது காலி இடங்கள் இருப்பதாகதெரிவிக்கப்படுகிறது. தற்போது, இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் வருவது தடைப்பட்டுள்ளதால் இவை நிரப்பப்படாமலே இருக்கிறது-இது திரும்ப இருப்போருக்காகவே இருக்கும் வேலை வாய்ப்புகள்.

இந்த வேலைகளை ஆந்திரா பிரதேசத்தில் உரிய மறுவாழ்வு கிடைக்காமல் தவிக்கும் தாயகம் திரும்பியோருக்கு அளிப்பதென்றால் அப்படி பாதிக்கப்பட்ட நிலையில் இருக்கிறவர்கள் சுமார் 200 குடும்பங்களுக்குமேலிருக்குமென தெரிகிறது. இந்த 70 இடங்களை அவர்களில் யாருக்கு கொடுப்பது? எல்லோரும் கேட்கத் தொடங்கி விட்டால் என்ன செய்வது என்று தமிழக அரசு யோசிப்பதாக தெரிகிறது.

நாம் கூறுவதென்ன வென்றால், உரிய காலத்தில் உதவிகள் அளிக்காமல் காலம் தாழ்த்தி அவர்களை மேலும் வறுமைக்கும்-வாழ முடியாத நிலைமைக்கும் தள்ளிவிடாமல் உடனடியாக அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும்-வேலை வாய்ப்பு இல்லாவிட்டால் வியாபாரக்கடனைக்கொடுத்து அவர்கள் சுயமாக வாழ வழி விட்டு விடவேண்டும் என்பதே. ○

# மக்கள் மறுவாழ்வு

மலர் : 5 அக்டோபர் '86 இதழ்: 1


## ஐந்தாவது ஆண்டில்....

''மக்கள் மறுவாழ்வின்'' வாசகர் நண்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும், மக்கள் மறுவாழ்வில் தொடர்ந்து தமது படைப்புகளை அளித்து வரும் எழுத்துலக நண்பர்களுக்கும் மக்கள் மறுவாழ்வு ஐந்தாவது ஆண்டில் தனது பயணத்தைத்தொடர்வது மகிழ்ச்சியான செய்தி.

தாயகம் திரும்பும் மக்களின் சமூக, பொருளாதார கல்வி, அரசியலுக்கு குரல் கொடுக்கவும், வழிகாட்டவும் - மலையக மக்களின் பிரச்சனை உணர்த்தவும் அவர்தம் விடுதலைக்குமாகவே ''மக்கள் மறுவாழ்வு'' தொடங்கப்பட்டது.

மக்கள் மறுவாழ்வு தான் கடந்து வந்த பாதையில் - தாயகம் திரும்பியோர், மலையக மக்களின் நலனே தனது இலட்சியம் என்ற இதய சுத்தியோடும் நேர்மை, நாணயம், தியாகத்தோடும் பயணம் செய்து வந்தது.

லாப நோக்கமும், எந்த சுயநலமுமின்றி கடந்த காலங்களில் தனது பணியைத் தொடர்ந்தது. இந்த கால கட்டத்திற்குப் பின்னும் பொருளாதார ரீதியில் இது தனது சுய பலத்தோடு நிற்க முடியவில்லை-எமது விடா முயற்சியும், உழைப்பும், பல நண்பர்களின், சமூக சேவையாளர்களின் - சில அமைப்புகளின் ஆதரவும் கலந்ததாலேயே இது தொடர்ந்து வெளிவருவதன் இரகசியம் - வெற்றியாகும்.

மேலும் இந்த ஆதரவும் - வாசகர்களாகிய உங்கள் ஆதரவும் தொடர்ந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் தனது பயணத்தை தொடர்கிறது.

இந்த பயணத்தின் நினைவாக 5வது ஆண்டு மலரை வெளியிட முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறோம்.

இந்த மாதத்தில் இம்மலர் வெளிவந்திருக்க வேண்டும். ஆயினும் இலங்கையிலிருந்து மலையக எழுத்தாளர்கள் மத்தியிலிருந்தும் - இங்கும் பலரிடமிருந்து அவர்களது படைப்புகள் வர ஏற்பட்டுள்ள தாமதத்தாலும் இம்மலரை தயாரிக்கும் பணியில் ஏற்பட்டுள்ள சில பிரச்சனைகளாலும் தாமதம் ஏற்பட்டுள்ளது. விரைவில் வந்துவிடும் என மகிழ்ச்சியுடன் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

இந்த 5வது ஆண்டு மலர் சிறப்புற-வெளிவர தங்களின் ஒத்துழைப்பை வழங்கவும் - மக்கள் மறுவாழ்வும் தொடர்ந்து வெளிவந்து தனது சேவையை ஆற்றிடவும் தங்களின் ஆதரவை நல்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறோம். O

## இலங்கைத் தமிழர்ப் பிரச்சனை : டில்லியில் மூன்றாவது சுற்றுப் பேச்சு ?

இலங்கைத்தமிழர் பிரச்சினைக்குத்தீர்வுகாண இலங்கை அரசுடன் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மற்றும் ஈழப் போராளிகள் ஆகியோர் இடையே முத்தரப்பு பேச்சு நடைபெறும் எனவும்-இந்த மூன்றாவது பேச்சு வார்த்தை இம்மாதம் அக்டோபரில் நடைபெறும் என இலங்கைப் பத்திரிகை செய்தி தெரிவிக்கிறது

மூன்றாவது சுற்றுப் பேச்சுக் குறித்து இந்திய அரசும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி மூன்று பேர் கொண்ட குழுவுடன் புது டில்லியில் தற்போது பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது.

பேச்சு வார்த்தை நடத்துவதற்கான வழி முறைகள் குறித்து இலங்கை அரசுடன் இந்திய அரசும் விவாதிக்கும் என்று த. ஐ. வி. மு. தலைவர் அமிர் தலிங்கம் குறிப்பிட்டிருக்கிறார்.

O

இலங்கை மலையகத்தில் கினித்தேனையில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் அலுவலகம் மீது யாரோ குண்டுவீசி தாக்கியதில் அலுவலகம் முழுமையாக சேதமடைந்தது.

இதையடுத்து அப்பகுதிகளில் வாழும் தமிழர்கள்வீடுகளிலிருந்து வெளியேறி அகதிகள் முகாமில் தஞ்சம் புகுந்துள்ளதாக செய்தியொன்று கூறுகிறது.

இது குறித்து பேசியுள்ள இ. தொ. காங்கிரஸின் தலைவரும் இலங்கை வீடமைப்புத் தொழில் அமைச்சருமான என் தொண்டமான், ''இலங்கை மலையகத் தமிழர்களுக்கு குடியுரிமை வழங்க வகை செய்யும் சட்டத்தை அமுலாக்க விடாது தடுக்க வேண்டும் என்பதற்காக சில எதிர்க்கட்சிகளும், இதர அமைப்புகளும் கூட்டாக முயன்று வருகின்றன என்று கருத்து தெரிவித்துள்ளார்.

O

கொழும்பு வெலிக்கடை சிறையில் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டிருக்கும் தமிழ் இளைஞர்கள், பெண்களில் ஒருவர் இறந்து விட்டார் எனவும், மூவர் நிலை கவலைக்கிடமாக இருக்கிறது என்றும் விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பொன்று கூறுகிறது.

வெலிக்கடை சிறையில் பெண்கள் உட்பட 26 தமிழ் அரசியல் கைதிகளும், பூசா முகாமில் 18 பேரும் காலவரையற்ற உண்ணாவிரதம் இருக்கின்றனர். மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 12 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்காக உருவாக்கப்பட்டுள்ள மாகாணக் கவுன்சில் பிரேரணைகளை எதிர்ப்பவர்கள் விஷயத்தில் புதிய நிலையை இலங்கை அரசு எடுத்துள்ளது.

இதற்கான மசோதா நாடாளுமன்றத்தில் எடுக்க தடுக்கும் சட்ட விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மரண தண்டனை, 20 ஆண்டு சிறைத் தண்டனை அல்லது சொத்துக்கள் பறிமுதல் போன்றவற்றைச் சந்திக்க நேரிடும் என்று அவசர நிலை சட்டவிதிகளைச் சுட்டிக் காட்டி இலங்கையரசு எச்சரித்துள்ளது.

மாகாணக் கவுன்சில் பிரேரணைகளை எதிர்த்து புத்த பிக்குகள் கண்டியில் கூடி கண்டனம் தெரிவித்து ஆர்பாட்டம் செய்தனர். இதில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவும் கலந்துக்கொண்டதைத் தொடர்ந்தே இந்த எச்சரிக்கை விடப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கிடையில், இலங்கை அமைச்சரவையில் இருக்கும் லலித் அத்துலத் முதலி போன்றவர்கள் ஈழப் போராளிகளை தனிமைப் படுத்தும் வகையில் பேசி வருவதும், இன்னமும் வட, கிழக்குப் பகுதிகளில் அப்பாவி மக்கள் மீது சிங்கள இராணுவம் தாக்குதல் நடந்து கொண்டுதான் என்பது குறிப்பிடத்தக்கது, O

## தலைமை நீதிபதிக்கு பெண் தொழிலாளர்கள் முறையீடு :

# எங்களுக்கு நீதி வழங்குங்கள்

''தாயகம் திரும்பிய நாங்கள் இந்த நாட்டில் எவ்விதமான ஆதரவும், உதவியும் இல்லாதவர்கள்; துன்பமும், துயரமும் ஏழ்மையும் மிகுந்த நிலையில் வாழ்கிறோம்; எங்களுடைய பிரச்சனைக்கு நீதி வழங்கி, எங்களை ஏழ்மையிலிருந்து விடுவிக்க வேண்டும்''

இவ்வாறு, இராணிப்பேட்டை மாலக் லெதர்ஸில் பணி செய்து, வேலையிலிருந்து நீக்கப்பட்ட தாயகம் திரும்பிய பெண் தொழிலாளர்கள் உயர் நீதிமன்ற தலைமை நீதிபதிக்கு முறையீடு செய்துள்ளனர்.

அவர்கள் தமது முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ளதாவது—

சிறிமாவோ-சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியவர்கள் நாங்கள். எங்களுக்கு தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கியின் மூலமாக 1982 ஆண்டு நவம்பர் 16-ம் தேதி இராணிப்பேட்டை மாலக் லெதர்ஸில் வேலை வழங்கப்பட்டது.

எங்களுக்கான வேலை வாய்ப்பு உத்தரவில் எங்களுக்கு தொழிலாளருக்குரிய சகலவிதமான உதவிகளும் சலுகைகளும் அளிக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டது. ஆயினும் தொழிலாளர் நலச் சட்டத்தின் கீழும், மறுவாழ்வு திட்டத்தின் கீழும் அளிக்கப்பட வேண்டிய எந்த உதவிகளும், சலுகைகளும் அளிக்கப்படவில்லை.

எங்களுக்கு அளிக்கப்பட வேண்டிய சம்பளமோ, மருத்துவ வசதி மற்றும் இதர வசதிகளோ அளிக்கப்பட் வில்லை.

நாங்கள் கசக்கி பிழியப்பட்டோமே தவிர எங்கள் வாழ்க்கைக்கு அத்தியாவசியத்திற்கு உரிய ஊதியமோ, வேறு உதவிகளோ பெறவில்லை. இதனால் எங்கள் வாழ்க்கையும் குடும்ப நிலையும் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது.

ஓராண்டுகளுக்கு மேலாக சகித்துக் கொண்டிருந்தோம். பின்னர் பல முறை நிர்வாகிகளிடம் எங்களுடைய கஷ்டங்களை சொல்லிப் பார்த்தோம். அவர்கள் மனமிறங்கவில்லை. நாங்கள் உரிமை கேட்டோம் என்பதற்காக எங்களுக்கு மேலும் கொடுமைகளே இழைத்தார்கள்.

நிர்வாகத்தின் மீது நம்பிக்கை இழந்த நாங்கள் எங்களுக்கு வேலை வாய்ப்பு கொடுத்த தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி அதிகாரிகளிடமும், சம்பந்தப் பட்டோர்களிடமும் முறையிட்டோம், அவர்களிடமும் எந்த நியாயமும் கிடைக்கவில்லை.

கடைசியில் இலவச சட்ட உதவி கழகத்தை நாடினோம். மேற்படி கழகம் எங்களுடைய புகாரை ஏற்று உயர் நீதி மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. முறையீட்டு எண் WP 6099-84.

நாங்கள் உயர்நீதி மன்றத்தை நாடியதின் காரணமாக நிர்வாகம் எங்களை வேலையிலிருந்தும் நீக்கியது.

வேறு வழியின்றி மேலும் ஒரு முறையீட்டை நீதிமன்றத்தில் செய்தோம். முறையீட்டு எண் WP 10352-84.

இதன் பேரில் எங்களுக்கு இறுதி தீர்ப்பு வழங்குவதற்காக 1985 ஆண்டு நவம்பரில் வாய்தா கொடுக்கப்பட்டது ஆனால இன்று வரை தீர்ப்பே கிடைக்கவில்லை.

ஐயா நாங்கள் உயர்நீதி மன்றத்தில் முறையீடு செய்துள்ள காரணத்தினால் எங்களுக்கு வேலை மறுக்கப் படுவதோடு, மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் மாற்றுதவி எதுவும் பெறமுடியாதவர்களாக மூன்று ஆண்டுகளாக துன்பப் படுகிறோம்'' என்றும் தமது முறையீட்டில் தெரிவித்துள்ளனர். O

# சிறு தொழிற்சாலை அமைத்திடுங்கள் !

## மாவட்ட ஆட்சியாளருக்கு கோரிக்கை

''வறட்சிகாரணமாக விவசாயம் பாதிக்கப்பட்டு விட்டது. வறுமையில் வாழும்எங்களுக்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பித்துக் கொடுத்து வாழ்வளிக்க வேண்டும்''

இவ்வாறு திருச்சி மாவட்டலால் குடிவட்டத்தைச் சேர்ந்த எதுமலைகாலனி தாயகம் திரும்பியோர் மாவட்ட ஆட்சியாளருக்கு மனு செய்துள்ளனர்.

மனுவில் கண்டுள்ள விபரம் வருமாறு :-

எதுமலைகாலனி, சுற்றியுள்ள கிராமங்களிருந்து 2 கி. மீ. தூரத்திலிருக்கிறது.

இந்த காலனியில் 26 தாயகம் திரும்பிய குடும்பங்கள் குடியமர்ந்துள்ளனர். காலனி உருவானது 1973ம் ஆண்டில் எங்களுக்கு அரசு வழங்கிய நிலங்களிலும் விவசாயம் செய்யமுடியவில்லை.

வறட்சி அல்லது அதிகமழை ஒன்றில் பாதிக்கப்பட்டு விவசாயமே செய்ய முடியாமல் பாதிக்கப்படுவது மாமூல் நிலையாகி விட்டது,

இது சம்பந்தமாக அமைச்சர்கள் முதல் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வரை நேரடியாகவும் கடிதம் மூலமாகவும் தொடர்பு கொண்டும் பலன் ஏதும் கிடைக்கவில்லை. எம். எல். ஏக்கள் வந்து பார்த்து பல முறை ஏதாவது செய்வதாக வாக்களித்தார்கள் ஆனால் 13 வருடங்கள் கடந்து விட்டது. இதுவரை எந்த வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

வறுமை தாங்க முடியாமல் சில குடும்பங்கள் வெளியே சென்று வாழ்கிறார்கள்.

அரசு இந்த காலனியை உருவாக்க மூன்று லட்சம் அளவில் செலவு செய்திருக்கிறது இருந்தும் மக்கள் பயன் பெறவில்லை போராடினால் போராடுகிறவர்கள் குற்றவாளியாக்கப்பட்டு காவல் துறையால் நடவடிக்கையும் எடுக்கப்பட்டு கைது செய்யப் படுகிறார்கள். நான்கு முறை கைது செய்யப்பட்டு விசாரணை செய்ததில் எங்கள்மீது நியாயம் இருந்ததால் நடவடிக்கையின்றி விசாரணை செய்யப்பட்டோம்.

ஏதாவது சிறுதொழிற்சாலை அமைத்துக் கொடுத்தால் நாங்கள் தொழிற் செய்து நிம்மதியாக வாழமுடியும்.

ஒரு சிறு தொழிற்சாலை அல்லது கூட்டுறவு மூலம் விவசாயப் பண்ணை அமைத்துக் கொடுங்கள். அல்லது சமுதாய கிணறு வெட்டி குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் விதம் பாசன வசதி செய்துக் கொடுங்கள், எதுவும் முடியா விட்டால் காலனியை மூடிவிட்டு எங்களுக்கு தேயிலைத்தோட்டங்களில்வேலைக் கொடுங்கள் என்று கேட்டுள்ளனர். O




## குடும்ப அட்டையும் காணவில்லை! மறுவாழ்வு உதவியும் கிடைக்கவில்லை!

நாப் நவம்பர்மாதம் 1979ம் ஆண்டு இலங்கையிலிருந்து தாயகம் திரும்பினேன்,எனக்கு கொடுக்கப்பட்ட வியாபாரக் கடன் ரூ.3000ல் ஒரு பெட்டிக் கடை வைத்து நடத்தி வருகிறேன்.

எங்கள் **வீட்டு** கடனுக்கு மனுசெய்த முதல் தவணைப் பணம் ரூ. 3000 (எச்.எல்.ஓ 376-82 83) கொடுக்கப் பட்டது. எனது 2ம் தவணை வீட்டு கடனுக்கும் வியாபாரம் விருத்தி செய்ய மேலாதிக்கக் கடன் இரண்டாயிரத்துக்கு மறுபடியும் மனு கொடுத்தேன். எனது மனு கடந்த 4 வருடங்களாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. காரணம் எனது குடும்ப அட்டை எனது கடன் கட்டு கோப்பில் இல்லையாம் அரசு அலுவலகத்தில் உள்ள கடன் கட்டு கோப்பில் உள்ள குடும்ப அட்டை எப்படிமாயமானது என்பது தெரியவில்லை. குடும்ப அட்டை இல்லை என்ற காரணத்தால் எனது வியாபாரத்தை விருத்தி செய்ய முடியாத நிலையிலும் வீட்டை கட்டமுடியாத நிலையிலும் தவிக்கிறேன்.

இது தொடர்பாக மறுவாழ்வு இயக்குநருக்கும் கடிதங்கள் எழுதியும் எந்த மாற்றமும் தெரியவில்லை. அவருக்கு எழுதும் கடிதங்கள் அப்படியே மாவட்டத்துக்கு அனுப்பப்படுகிறது. அதன்பிறகு எந்த பதிலும் இல்லை. மறுவாழ்வு இயக்குநர் எவ்வித நடமுடிக்கையும் எடுப்பதில்லை. அனுப்பும் கடிதங்களை மாவட்டத்துக்கு அனுப்புவதோடு அவர் கடமை முடிந்து விடுகிறது. அதற்குரிய பதிலை மாவட்ட அதிகாரிகள் எந்த விதத்தில் அனுப்புகிறார்கள் என்பது எனக்கு தெரியாது.

பொறுப்பற்ற சில அதிகாரிகள் மறுவாழ்வுபகுதியில் இருப்பதால் என்னைப் போன்ற பல தாயகம் திரும்பியவர்கள் இடஞ்சலுக் குள்ளாகிறார்கள். இதே போன்று புதுக் கோட்டை மாவட்டத்தில் கடன் கட்டுகோப்புகளிலிருந்து பாஸ்போர்ட் குடும்ப அட்டை முதலியன காணவில்லை என்று பல புகார்கள் இருந்தும் அதிகாரிகள் உதாசீனமாய் இருப்பது ஏன் என்று தெரியவில்லை.

எனது பாஸ்போர்ட் இலக்கம் சீ. 362688. குடும்ப அட்டை கே. 068450. எனக்கும் என் குடும்பத்துக்கும் எப்போது முறுவாழ்வு கிடைக்கும் என்று ஏங்கிக் கொண்டிருக்கிறேன்.

**இரா. பாலகிருஷ்ணன்**

புதுக்கோட்டை

## ஆவணங்களைக் காணவில்லை உதவியும் வழங்க மறுப்பு!

நான் இலங்கையிலிருந்து தாயகம் திரும்பிய மேற்படி கிராமத்தில் குடியிருக்கிறேன். எனக்குரிய வீட்டுக்கடனுக்கு மனு கொடுத்து முதல் தவணைப் பணம் 12-9-83ல் கொடுக்கப்பட்டது. 2-ம் தவணைப் பணத்துக்காக விண்ணப்பம் கொடுத்து மறுவாழ்வு தாசில்தார் 12-9-85ல் கொடுத்த பணத்தை உரிய முறையில் பயன் படுத்தியுள்ளோனா என்று பார்வையிட்டார்கள். இதுநாள் வரை எனக்கு கொடுககப்பட வேண்டிய இரண்டாம் தவணைப்பணம் கொடுக்கப்படவில்லை.

பலமுறை புதுக்கோட்டை அலுவலகத்திற்கு சென்றும் ஒரு வழியும் பிறக்க வில்லை. யு எப்.எப்.ஆர் உதவியை நாடினேன். அவர்களுடன் சென்று விசாரித்தபோது, என்னுடைய கடன்கோப்பில் குடும்ப அட்டையும், பாஸ்போர்ட்டும் மாத்திரம் தான் உள்ளது. எனக்கு வறங்கப்பட்ட கடன் பற்றிய விவரம் மற்றும் இதர கடிதங்கள் அந்த கோப்பில் இல்லாதிருக்கிறது. இது யாருடைய கவலையீனத்தால் நடந்திருக்கிறது என்பது தெளிவாக தெரிகிறது, இருந்தும் எனக்கு கடன் வழங்க அதிகாரிகளுக்கு மனமில்லை.

இது விஷயம் மறுவாழ்வு இயக்குநருக்கு தெரிவித்தும் என் கடன் வழங்க ஏறபாடு செய்யப்படவில்லை;

**வேல்சாமி**

ஒளியமங்கலம்
புதுக்கோட்டை

மக்கள் மறுவாழ்வு

# ஐந்தாவது ஆண்டு மலர்

**அதிக பக்கங்களோடு வெளிவருகிறது**

மலையக மக்களின் வரலாறு, வாழ்க்கை, சமூகம், கலை, இலக்கியம் மற்றும் தாயகம் திரும்பியோர் பிரச்சனைகள் குறித்தும் பலர் எழுதுகிறார்கள்.

தொடர்புக்கு :

மக்கள் மறுவாழ்வு
அஞ்சல் பை எண்: 5560
**சென்னை-600094**

# அரசியல் லாபத்திற்கும், லஞ்ச லாவண்யத்திற்குமே சட்டமும், நடைமுறைகளும் வளைந்து கொடுக்கின்றன!

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

தாயகம் திரும்பியோருக்கு வீடுகட்ட கடனுதவி செய்கிறது ஆனால் இவர்களுக்கு இந்த நாட்டுக்குப் புதியவர்கள். வீட்டுமனை தேடிக் கொள்ள முடியாதவர்கள் கடனுதவி பெற்று உரிய முறையில் வீடுகள் கட்டிக்கொள்ளும் அனுபவமில்லாதவர்கள் அந்த அனுபவமின்மையை அறியாமையைப் பயன்படுத்தியே இடைத்தரகர்கள் கான்ட்ராக் காரர்கள் இவர்களை ஏமாற்றுகிறார்கள் இதை பல முறை சம்பந்தப்பட்டவர்களுக்கு உணர்த்தியும் —சம்பந்தப் பட்டவர்கள் உணர்ந்தும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை; மாற்றுத்திட்டம் கொண்டு வர முயல வில்லை, நிரந்தரமாக இங்கே வாழப்போகிறவர்களுக்கு உரிய முறையில் நிரந்தரமான வாழ்வை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளாது வெறுமனே கடனுதவி என்று கைகளை கழுவுவது என்ன நியாயம்?

தாயகம் திரும்பியோர் அரசியல் பின்னணி-அரசியல் லாபம் இல்லாதவர்கள் என்பதால் தான் இவர்களது கோரிக்கைகள் உடைப்பில் போடப் படுகின்றனவா?

## பிரச்னைகளைத் தீர்த்திருக்கலாம்

வங்கியின் மறுவாழ்வு துறையின் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நினைத்தால் வேலை வாய்ப்புபெற்று பாதிக்கப்பட்ட தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளைத்தீர்த்திருக்கலாம். நெய்வேலி அரசு பண்ணை கழகத்தில் பணிசெய்த தாயகம் திரும்பியோர்க்குபண்ணையின் நிலம் பகிர்ந்தளித்திருக்கலாம். தூத்துக்குடி,மல்லாங்கிணறு போன்ற இடங்களில் குடியேறியுள்ளவர்களின் வீட்டுப் பிரச்சனைக்குத்தீர்வு வைத்திருக்கலாம்.

சிலர் செய்ய முன் வந்தாலும் சிலர் செய்ய விடாது தடுத்து முட்டுக்கட்டைபோடுவதையும் நாம் கண்டிருக்கிறோம்.

எந்தபிரச்சனை-தேவை என்று சம்பந்தப் பட்டவர்களை நாடினாலும் சட்டத்தை புரட்டுகிறார்கள், அல்லது அலுவலக நடைமுறை வழக்குகளைப் பார்க்கிறார்கள்.

## 'லாபம்' என்றால்

ஆனால் அரசியல் லாபமென்றால் சட்டத்தையும் புரட்டுவதில்லை; நடைமுறை வழக்குகளையும் பார்ப்பதில்லை அதிகாரிகள், அலுவலகர்கள், உடனடியாக தீர்வு காண்கிறார்கள் ஆணை பிறப்பித்து விடுகிறார்கள். அரசியல் லாபம் மட்டுமல்ல, லஞ்ச லாவண்யத்திற்கும் சட்டமும், நடைமுறை வழக்குகளும் வளைத்தே கொடுக்கின்றன என்பதை இங்கு சுட்டிக் காட்டாமல் இருக்க முடியாது.

## ஏன் உணரவில்லை

இன்னொன்றை இங்கு சொல்லாமலும் இருக்க முடியாது கோரிக்கைகளை முன் வைத்தும், பிரச்சனைகளுக்குத் தீர்வு பெற சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு சென்றால் அதிகாரிகள் முகம் சுளிக்கிறார்கள் 'தாயகம் திரும்பியோர்' தானே என்று தாயகம் திரும்பியோர்கள் அன்னியர்கள் போல கருதப்படுகிறார்கள், முத்திரை குத்தப்படுகிறார்கள். தாயகம்திரும்பியோர்கள் இந்த நாட்டின் தமிழ் மாநிலத்தின் வம்சாவழிகள் என்பதை உணரத்தவறுகிறார்கள் அவர்களது ரத்தஉறவு உறவினர்கள் இங்கே தான் இருக்கிறார்கள், நிலம், வீடு, வாசல் கூட இருப்பதை உணரவதில்லை, இந்த உண்மைகள் கூட தெரியாத அதிகாரிகள் அலுவலர்கள் மறுவாழ்வு துறை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் இருக்கிறார்கள். அவர்கள் தாயகம் திரும்பினோர்களை இந்த நாட்டிற்குரியவர்கள் அவர்களுக்கு எல்லா உரிமையும் உண்டு என்ற மரியாதையோடு நடத்துவதில்லை என்பது வேதனைப் படத்தக்கது.

இதுமாதிரியான போக்குகள் மாற வேண்டும் சம்பந்தப்பட்ட தாயகம்திரும்பியோர் மத்தியில் கொழுந்து விட்டு எரியும் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும். இவை உடனடியாக கவனிக்கப்பட வேண்டும்,

## தீர்க்கவேண்டிய பிரச்சனைகள் பல

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி மூலம் வேலை வாய்ப்பு பெற்று குடியமர்த்தப்பட்ட, மாலக் லெதர்ஸ்[வடாற்காடு], அங்கப்பா நூற்பாலை (மதுரை) கந்தசாமி நூற்பாலை (பவானி)பவானிமில்கள்(கோவை), கோதாவரி இரப்பர் (ஆந்திரா), மதன் எக்ஸ் போர்ட்(கடலூர்) ஸ்டேன் மோர் எஸ்டேட் (சேலம்) முதலான பல நிறுவனங்களில் தொழிற் பிரச்சனைகள் கொழுந்து விட்டெரிகிறது.

தூத்துக்குடி நூற்பாலை, வியாசர் பாடி (சென்னை), மல்லாங்கிணறு, புதுக்கோட்டை முதலான இடங்களிலுள்ளவர்களுக்கு வீட்டுப்பிரச்சனை தீரவில்லை,

அரசுப்பண்ணை(நெய்வேலி காஞ்சிப்புரம், கரப்பக்குடி, திருவாரூர் முதலான இடங்கள்) மூடப்பட்டதால் வேலை இழந்தோருக்கு நிலம் வழங்கும் பிரச்சனை பல வருடங்களாக இருக்கிறது,

இன்னும் பல தனியார் நிறுவனங்களால் வேலை பெற்றோர் வேலை இழந்த நிலையில் இருக்கிறார்கள்.

பெரம்பலூர் சர்க்கரை ஆலை முதல் பல நிறுவனங்களில் தாயகம் திரும்பியத் தொழிலாளர்கள் நிரந்தரம் செய்வதிலும், பதவி உயர்வு அளிப்பதிலும் கல்வித்தகுதி கோருதல் போன்ற பிரச்சனை தீராத பிரச்சனையாக இருக்கின்றன.

இவையெல்லாம் உடனடியாக தீர்க்கப்பட வேண்டியவையாகும்.

## உடனடியாக தீர்வு காண்க

ஒவ்வொரு ஆண்டும் பிரதிகள் பேரவை கூடுவதும் வாக்குறுதிகள், நம்பிக்கைகள் ஊட்டுவதாகவுமே இருக்கிறது பிரச்சனைகளை தீர்க்க முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

கூட்டம் கூட்டி பிரதிநிதிகளுக்குவிருந்துபசாரமும், பிரயாணப்படியும், தங்கும்வசதிகளும் ஒழுங்காக கிடைக்கச் செய்து விட்டால் போதாது. இது முக்கியமல்ல; தாயகம் திரும்பியோர்களின் பிரச்சனைகள் தீர வேண்டும் அவர்கள் உரிய மறுவாழ்வு உதவிகள் பெற்று, ஒரு வேலை கஞ்சியாவது குடிக்கவும், உறைவதற்கு ஒரு குடிசையாவது கிடைக்கவும் திட்டம் தீட்டி நடவடிக்கை எடுக்க வேண்டுமென விரும்புகிறோம். ○

1964 சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை தொடர்ந்து 1968 யிலிருந்து இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் இந்தியா வரத் தொடங்கினர்.

தாம் பிறந்து வளர்ந்து வாழ்ந்த மண்ணிலிருந்து தாம் என்றும் வந்திராத, வந்து வாழ்ந்திராத புதிய பூமிக்கு தாயகம் திரும்பியோர் இங்கு அரசின் உதவியுடன் - சுய முயற்சியுடன் தமது மறுவாழ்வை அமைத்துக் கொள்ள வருகிறார்கள்.

மறுவாழ்வு அமைக்கும் முயற்சியில் அவர்கள் கண்ட பலன் குறித்து பேசுவதாயில் கேள்விக்குறிதான் நம்முன்னே வந்து நின்றாலும் அதற்கு கிடைக்கின்ற பதில் தோல்வி என்பது தான்.

## மறுவாழ்வு உதவி

பலர் தாம் பார்த்திராத- வந்து வாழ்ந்திராத புதிய பூமியாக இருக்கும் இம்மண்ணில் தமது பூர்வீகக்கிராமத்திலுள்ள தமது அப்பன் பாட்டன் வைத்துப்போன நிலத்தையும் வீட்டையும் நம்பி வந்தாலும் அவர்கள் அரசின் மறுவாழ்வுத் திட்டம் அளிக்கும் உதவியின் ஊடாகவே வருகிறார்கள்- வந்து வாழ்வை அமைக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

மறுவாழ்வு திட்டத்தின் கீழ் வியாபாரக் கடனுதவி விவசாயக் கடனுதவி, தொழிற் வாய்ப்பு, பயிற்சி, தாயகம் திரும்பியோர் வங்கி மூலம் வேலை வாய்ப்பு, கல்விச்சலுகைகள், துணையற்ற பெண்களுக்கு உதவி, உள்ளுறை உயர்கல்வி வசதி (மாத்தூர்) முதலாக பல உதவிகளும் சலுகைகளும், நிவாரண உதவிகளும் அளிக்கப்பட்டு வருகிறது.

## தோல்வியும் துயரமும்

ஆயினும், பாட்டன், பூட்டன் சொத்தை நம்பி வந்தவர்கள் எதிர்ப்பார்த்த எதுவும்

# தாயகம் திரும்பியோர் மத்தியில்

# சேவா அமைப்பு

இல்லாமல் துயரப்பட்டு நிற்கிறார்கள்.

மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் வியாபாரக் கடன், வீட்டுக் கடன் என்று மனு செய்தவர்களால் சுயமாக எதையும் சாதிக்க முடியவில்லை. இடைத் தரகர்களையும் காண்டக்காரர்களையும் நம்பி இருக்க வேண்டி இருக்கிறது - நம்பி இருந்து, நற்றாற்றில் தள்ளப்படுகிறார்கள். ஒதுக்கிடு இருந்தும் தகுந்த தொழிற்வாய்ப்பு - பயிற்சிக்கான வாய்ப்புகள் கிடைப்பதில்லை.

தாயகம் திரும்பியோர் வங்கி மூலம் பல தனியார் நிறுவனங்களில் வேலை பெற்றோர், அந் நிறுவனங்களின் போக்கினால் வேலையில் நீடிக்க முடியாமல் வாய்ப்பிழந்து தவிக்கிறார்கள்.

இந்த வங்கியின் மூலம் வேலை வாய்ப்பு பெற்ற பல தாயகம் திரும்பியோர் வேலை செய்து வந்த அரசு விவசாயப் பண்ணைக் கழகம் இழுத்து மூடப்பட்டு விட்டது- இன்னும் இதுபோல பல நிறுவனங்களில் வேலை செய்த தாயகம் திரும்பியோர் வேலை இழந்தார்கள்.

கல்விச் சலுகை, ஒதுக்கீடு என்பது பெயரளவிலேயே இருக்கிறது.

வேலை நிரந்தரம், உயர்வு போன்றவற்றில் தாயகம் திரும்பியோர் 'அன்னியர்' போல பழி வாங்கப்படுகிறார்கள்.

மறுவாழ்வுத் திட்டத்தின் வழங்கப்பட்ட பல சலுகைகள் படிப்படியாகக் குறைந்து விட்டன. வியாபாரக்கடன் வீட்டுக் கடன் போன்ற கடனுதவி மற்றும் நிவாரண உதவிக்கான தொகைகள் மட்டுமே உயர்த்தப் பட்டுள்ளன.

என்றாலும் அவை உயர்ந்தாலும் உரியவர்களுக்கு, உரிய முறையில் உரிய காலத்தில் சேரத் தவறிவிடுகின்றன.

## சிலருக்கு நன்மை

இந்த மறுவாழ்வுத் திட்டத்தின்கீழ் தேயிலை, றப்பர், காப்பிப்போன்ற மலைத் தோட்டங்களில் வேலைப் பெற்றோரும், ரும், கூட்டுறவு நூற்பாலைகள், சர்க்கரை ஆலைகள் மற்றும் போக்குவரத்து நிறுவனங்களில் வேலை பெற்றோரும் - சுயமாக வேலை வாய்ப்பு அலுவலகத்தின் மூலம் அரசு அலுவலகங்கள், நிறுவனங்களில் வேலை பெற்றோர் மட்டுமே நிலையாக வாழ்வு பெற்று நிம்மதியாக இருக்கிறார்கள். இவர்களை அதிர்ஷ்ட சாலிகள் என்றே சொல்ல வேண்டும்.

மற்றவர்கள் - பெரும்பான்மையோர் துரதிஷ்டத்தின் பிடியிலே சிக்கித் தவித்துக்கொண்டிருக்கிறார்.

## கோரிக்கை அற்றவராய்...

தாயகம் திரும்பியோர் பிரச்சனைக் குறித்தும்-அவர்களுக்கு அளிக்கப்படும் மறுவாழ்வு உதவிகளை உரிய முறையில் வழங்கவும்-அரசு ஆணையில் இருக்கக்கூடிய திட்டங்களை சரியாக அமுல்படுத்தவும்-உதவிகள், சலுகைகள் பெருகவும் அரசுக்குக் கோரிக்கைகள் வைக்கப்பட்டுத்தான் வருகிறது. அவ்வப்போது புகார்களும், மனுக்களும் அனுப்பப்பட்டுதான் வருகிறது - ஆனால் நமது கோரிக்கைகள் எடுபடவில்லை அரசியல் அனாதைகளாக - அன்னியர்களாக கருதப்பட்டே வருகிறோம்.

நமது கோரிக்கைகள் எடுபடாமல் போவதற்கும் - நாம் அரசியல் அனாதைகள் போல கருதப் படுவதற்கும் என்ன காரணம்?

## என்ன காரணம் ?

நம்முடைய குரல் ஓங்கி ஒலிக்கவில்லை. கொசுக் கடியையும் மூட்டைப் பூச்சுக் கடியையும் சொறிந்து விடுகிற சுருசுருப்பு மாதிரி அங்கும் இங்குமாக எங்கோ கேட்கும் குரல் போல-ஒலிப்பதுதான் - நாலரை, ஐந்து லட்சம் பேருக்கு மேற்பட்ட தாயகம் திரும்பியோர்கள் இருந்தும் நம்மிடத்திலிருந்து ஒருமித்த குரல், வலுபலம் மிகுந்த, இயக்க பூர்வமான குரல் ஒலிக்கத் தவறியது தான்.

## சேவா அமைப்புகள்

தாயகம் திரும்பியோர்களாகிய நமது மத்தியில் பல அமைப்புகள் இருக்கின்றன. பல வருடங்களாக பணி செய்கின்ற அமைப்புகள்-பல கிளைகளைக் கொண்ட அமைப்புகள் - சிறிய அமைப்புகள் என பல அமைப்புகள் தொண்டு செய்து வருகின்றன.

இவையெல்லாம் தாயகம் திரும்பியோருக்கு கோரிக்கைகள் வைக்காமல் இல்லை; அரசு சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்கு தமது கோரிக்கைகளை வைத்ததோடு, தாயகம் திரும்பியோர் குறித்த பிரச்

# களின்

சினைகளை-புகார்களை வைக்காமல் இல்லை.

ஆயினும் அவற்றை அரசு நிறைவேற்றுவதில் நிறைவேற்ற வைப்பதில் அவற்றுக்கு எந்த வகையிலும் அக்கறை இருந்தது என்று சொல்வதற்கில்லை - அக்கறையே கொண்டதே இல்லை என்று சொல்லவே வேண்டும். தமது தீர்மானங்களையும் கோரிக்கைகளையும் வைத்தது என்றாலும் அவற்றை 'விளம்பர' அளவிலேயே செய்து திருப்தி கண்டன.

# பணியும் பங்கும்

மற்றபடி, தத்தமக்கேயுரிய, தாம் எடுத்துக் கொண்ட வேலை திட்டங்களையும் தமக்கு முடிந்ததை, தெரிந்ததை மட்டுமே செய்து திருப்தி கண்டு வந்தன. திருப்தி கண்டும் வருகின்றன.

## இவற்றின் பணிகள்

தனிப்பட்ட வகையில் தாயகம் திரும்பியோர் தமது பிரச்சனைக்கு கொடுக்கும் மனுவின் பேரில் அரசுக்கு எழுதுவது; அதற்கு தீர்வு காண முயலுவது.

நிலக்காலனி போன்றவற்றில் குடியேற்றி சுயவேய்ப்பு போன்றவற்றில் ஈடுபடுத்துவது.

மறுவாழ்வு திட்டத்தின் கீழ் கிடைக்கும் வீட்டுக் கடனுதவி மூலம் வீடுகள் கட்டிக்கொடுப்பது.

உள்ளூர் மக்களோடு ஒருங்கிணைத்து அவர்களுக்கு அரசு அளிக்கும் உதவிகளை பெறவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்வது.

வேலை வாய்ப்பில் ஈடுபட்டுள்ள தாயகம் திரும்பியோர்களின் தொழிற் தகராறுகளை தீர்த்துவைக்கும் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது,

அரசின் புறம்போக்கு நிலங்களில் குடியேற்றங்களை ஏற்படுத்துவது.

கல்விமுதலான சலுகைகளை பெற்றுக் கொள்ள செய்வது,

வெறும் கருத்தரங்குகளும் பயிற்சி முகாம்களும் நடத்துவது.

இதுபோன்ற மிகக்குறிப்பிட்ட பணிகளிலேயே ஈடுபட்டன; திருப்தி கண்டன,

## அக்கறை இல்லை

ஆனால் தாயகம் திரும்பியோருக்கு கிடைக்க வேண்டிய உதவிகள், சலுகைகள் உரிய காலத்தில் உரிய முறையில் கிடைக்க முயற்சிகள் மேற்கொள்ளவே தவறின.

வியாபார, வீட்டுக் கடன் பெறுவதில், வழங்குவதில் வழங்குவதிலுமுள்ள குறைபாடு, குறுக்கீடுகள், முறைகேடுகள் குறித்து அக்கறைப்படவில்லை.

மறுவாழ்வு அலுவலகங்களும் தாயகம் திரும்பியோருக்குமிடையில் நிற்கும் இடைத்தரகர்கள். காண்டிராக்ட்காரர்கள் குறித்து கவலை கொள்வதில்லை (சில அமைப்புகளில் பணி செய்து வரும் மிகச்சில பணியாளர்கள் இவர்களுக்கு துணைப் போகிறார்கள் என்பதை நாம் மறுக்க முடியாது)

## ஒருங்கிணைப்பு முயற்சிகள்

தாயகம் திரும்பியோருக்கு இருக்கிற கல்வி வேலைவாய்ப்பு ஒதுக்கீடுகள், சலுகைகள் முறையாக சீராக கிடைக்க வேண்டும் என்ற விஷயத்தை கண்டு கொள்ளவில்லை

இந்த பிரச்சனைகளில் நாம் அக்கறை கொள்ள வேண்டிய தன் அவசியம் குறித்தும் அதற்காகஒருங்கிணைந்து ஒருமித்து குரல் எழுப்ப வேண்டிய தன் அவசியம் குறித்தும், இந்த ஒருங்கிணைந்த குரலை எழுப்பவும் அனைத்து அழைப்புகளும் ஒன்றிணைந்த கூட்டு முயற்சிகள் அவசியம் குறித்தும் சிலர் கருத்தில் கொள்ளவும் செய்தனர்.

இந்த அவசியத்தை கருத்தில் கொண்டு பல முறை அனைத்து அமைப்புகளையும் ஒன்று கூட்டி ஒருங்கிணைந்த பணிகளுக்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன.

டெல்லி, பெங்களூர், மதுரை, கோவை, சென்னை என்று பல முறை அனைத்து அமைப்புகளின் கூட்டங்கள் கூட்டப்பட்டன; பேசப்பட்டன.

ஆனால் ஒருங்கிணைப்புகள் உருவாகவே இல்லை. கூட்டு முயற்சிகளுக்கு வழியே பிறக்கவே இல்லை.

## சுயநலமே தடையாக

அமைப்புகளுக்கிடையில் பரஸ்பர நட்புறவுகள் இல்லை.

அமைப்புகளுக்கு அமைப்பு காழ்ப்புணர்ச்சிகள் கொள்ளுதல் ஒரு அமைப்பின் செயல்பாட்டில் இன்னொரு அமைப்பு தலையிடுதல்.

ஒரு பகுதியில் ஒரு அமைப்பு பணிசெய்யும்போது இன்னொரு அமைப்பு அவசியமற்ற முறையில் தலையிடுதல்.

காழ்ப்புணர்ச்சியின் காரணமாக ஒரு அமைப்பின் மீது இன்னொரு அமைப்பு தவறான கருத்துக்களை தாயகம் திரும்பியோர்கள் மத்தியில் பரப்புதல்.

தாங்கள் சார்ந்துள்ள இயக்கங்கள், அமைப்புகளின் கொள்கைக்காக குறிப்பிட்ட அமைப்புகளை காரண காரியம் இல்லாமலே (சம்பந்தா சம்பந்தம் இல்லாதவர்கள்) திட்டுவது, தவறான பிரச்சாரம் செய்வது, துண்டு பிரசுரங்கள் வெளியிடுவது, பத்திரிகைகளில் எழுதுவது.

இன்னும் தங்கள் சங்கமே நீண்ட காலம் பாடுபடுவது, பெரியது என்பது போன்ற கௌரவப் பிரச்சனை.

தாங்களே தாயகம் திரும்பியோருக்கு பாடுபடக் கூடியவர்கள், தாங்கள் தாயகம் திரும்பியோர்களின் ஏகபோகம் என்ற நினைப்பு.

இவையே அமைப்புகளுக்கிடையே ஓர் ஒருங்கிணைப்பு தோன்றுவதற்கும், ஒருமித்த குரல் எழுப்ப முடியாமல் இருப்பதற்கும் காரணமாக இருக்கின்றன.

இந்த நிலைமை நீடிப்பதன் மூலம் தாயகம் திரும்பியோர் பிரச்சனை தீர போவதில்லை பிரச்சினைகள் மேலும் வளர்வதை தடுக்க முடியாது.

மறுவாழ்வு உதவிகள் பெறுவதில் கிடைக்கும் சலுகைகளை அடைவதில் மேலும் நெருக்கடிகளே வளரும்.

இடைத்தரகர்கள், காண்ட்ராக்காரர்களின் சுரண்டலிலிருந்தும் கொள்ளையிலிருந்தும் அரசுதுறை அலுவலர்களின் லஞ்ச லாவண்யத்திலிருந்து மீட்கமுடியாது போய்விடும்.

(11-ம் பக்கம் பார்க்க)

## நடைச்சித்திரம்

# எங்கள் தோட்டத்து கங்காணியார் !

அந்த குக்கிராமத்தில் எங்கள் தோட்டத்து கங்காணியார் நான்கு பக்கங்களும் புதர்கள் மண்டி முற்செடிகள் நிரம்பிய- இன்றோ நாளையோ தன் வாழ்வை முடித்துக் கொள்ளும் என்ற நிலையில் அந்த குடிசை நிற்கிறது.

அந்த குடிசையின் வாசலை தாண்டி உள்ளே சென்ற பொழுது, மருந்து நெடியும் வேறு ஏதேதோ வாடைகளும் மூக்கை துளைக்கின்றன. கரப்பான் பூச்சி எலிகள் மூலைக் கொண்டாக ஓடத் தொடங்கியது,

எப்படி இலங்கையில் வாழ்ந்த கங்காணியார் ... இன்று இந்த குடிசையில் யாரும் அற்ற அனாதையாக . . . படுக்கையில் கிடக்கிறார். பக்கத்து வீட்டு தூரத்து உறவுக்காரர் அவ்வப்போது கவனித்து கொள்கிறார்.

ஆம்! வற்றிய உடல்—கம்பீரமான அந்த காலத்து மீசையை காணவில்லை. எலும்பும் தோலுமாக —காதுகள் சரியாக கேட்காத நிலையில் ... ?

அன்று வெள்ளையன் ஆட்சியிலேயே, இலங்கை தேயிலை தோட்டத்தில் செல்வாக்கோடு வாழ்ந்த கங்காணியார் தான் இவர்.

கம்பீரமான உருவம் கொண்ட, வெள்ளை வேட்டி, கருப்பு பெல்ட், கருப்பு கோட்டு, முன்டாசு சகிதமாக காலை ஆறு மணிக்கே வீட்டை விட்டு கிளம்பி விடுவார். கிளம்பும் போதே அதிகாரம் கொடிகட்டிபறக்கும். .. "அடியே!" என்று தன் தர்மபத்தினியை அழைத்து-"அந்த குடையை எடுடி ! மழை வரும் போல் தெரிகிறது" என்று சொல்லிக் கொண்டே குடையுடன் கிளம்பி விடுவார்.

காலை ஆறுமணிக்கு கிளம்பு வாரானால் ... மழையோ, வெயிலோ? மாலை ஆறு மணிக்கு தான் வீட்டுக்கு . . .! எல்லாமே மலையில் தான்.!

அன்று வெள்ளையன் (ஆட்சியிலேயே. நிர்வாகத்திலேயே 'சபாஷ்' வாங்கியவர்.

ஒரு நாள் தோட்ட தொழிலாளிகள் காலை ஏழு மணி முதல் பகல் ஒருமணிக்குள் தங்களால் எண்பதுதேயிலைகளுக்குமேல் கவ்வாத்து வெட்ட முடியாது என்று சொல்ல, மறுநாள் கங்காணியார், அதே நேரத்துக்குள் நூற்றிபத்து தேயிலைகளை கவ்வாத்து பண்ணி வெள்ளை துரையிடம் 'சபாஷ்' பெற்று, "கங்காணி இங்கே வாங்க!" என்று மரியாதையையும் பெற்றார். தோட்ட நிர்வாகம் இவர் கைகளில்தான் இருந்தது'

சில வருடங்களில் வெள்ளையர்கள் தன் சீமைக்கு ஒவ்வொருவராக செல்ல தொடங்கினர். அவர்கள் செல்லச் செல்ல தோட்டநிர்வாகம் சிங்களவர் கைகளுக்கு மாறியது.

சிங்கள நிர்வாகம், ஏனோ, தானோ என்று எங்கள் கங்காணியாரை மதிப்பதில்லை.

வார்த்தைகள்.. "டேய் கண்காணி" என்று மரியாதைகள் எல்லாம் குறைய தொடங்கிய பின் தான்.....

" டேய் " வார்த்தையை கேட்க கேட்க கூனிக் குறுகி போய் விட்டார்.

இரண்டு பெண் பிள்ளைகள்- அவரது செல்வங்கள்; அவர்களும் திருமணத்துக்கு தயார் நிலையில் இருந்தனர்.

"இவர்களை எப்படி? கரை சேர்ப்பது?"- மாப்பிள்ளை தேடும் படலத்தையும் தொடங்கிறார்.

இக்கால கட்டத்தில் தான், "இந்திய தோட்ட தொழிளாளர்களுக்கு விமோசனம்" என்று சொல்லிக் கொண்டு, ஓர் ஒப்பந்தம் தயாரானது அது தான் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம்.

இதுவரை - வாழ்ந்த - செம்மை படுத்திய மண்ணான— அந்த மண்ணின் வாசனையை மறந்து, கங்காணியார் இதயத்தில் 'இந்தியா சென்று வாழலாமே?... இந்தியாவில் என் பெண்களுக்கு மாப்பிள்ளை தேடலாமே? அங்கு சென்றால் வீடு பணம் - வேலை எல்லாம் தருகின்றார்களாமே!' என்ற எண்ணங்கள் தோன்ற—

இந்தியா செல்ல தயாராகி விட்டார்.

'ஐம்பத்தி ஆறு வயதை கொண்ட கங்காணியார், அன்றிலிருந்து நிமிர்ந்து நடக்க தொடங்கிவிட்டார்.

"டேய் காத்தான் .. நான் இந்தியா போறேன்டா? என் பொண்ணுகளுக்கு .. நல்லபடியா இந்தியாவிலே மாப்பிள்ளை தேடி .. திருமணத்தை நடத்தி வைக்க போறேன்.

எனக்கும் நீலகிரியில் வேலை தரேன்- என்று கடுதாசி எழுதியுள்ளாங்க! நான்தான் வேண்டாம் என்று சொல்லி விட்டேன்"

"ஏன்? சாமி"

"யாருடா! இனிபோய் அடிமையா வேலை செய்வது. நான் லோன் கேட்டு அப்பிளிகேஷன் போட்டுள்ளேன்."

"கைகளில் உள்ளதை எடுத்துகொண்டு லோனை நம்பி புறப்பட்டு விட்டார்.

கண்ணீரோடு கப்பலும் ஆடி அசைந்து இலங்கையை விட்டு புறப்பட்டது கங்காணியார் கண்ணீர் கண்களை மறைக்க, அவர் மாடாய் உழைத்த அந்த மண், அவர் கண்களிலிருந்து மறைய தொடங்கியது. ஆனால் இதயத்திலிருந்துமறையவில்லை, . .மறக்க முடியவில்லை.

மறுநாள் இந்திய மண்ணை, தமிழகத்துமண்ணைமிதித்தார். தான் வாழப்போகும் நாட்டை பார்த்து, கப்பலில் விட்ட கண்ணீர் எல்லாம் எங்கோ மறைந்து விட்டது.

அவரை வரவேற்க, அண்ணன் மகன் வந்திருந்தான், பெரியப்பாவை பார்த்து கண்ணீர் விட்டான். ஓடி... ஆடி.. பெட்டிகளை எல்லாம் பாஸ்ஞ்சர் வண்டியில் ஏற்றினான். ஏறுக் கொண்டு இருக்கும் பொழுதே பெரியப்பா, எனக்கு டிக்கட் ஒன்று எடுத்து வந்திருங்க . . " என்று பெரிசா சத்தம் போட்டான். டிக்கட்டும் எடுத்தார்.. ! கிராமத்துக்கு வரும் வரை செலவும் செய்தார்.

நாற்பது வருடங்களுக்குமுன் ஒற்றைமனிதராய் இலங்கைக்கு ஓடியவர். இன்று மனைவி-மகள்கள் என்று உறவுகளுடன் கிராமம் வந்துள்ளார்,

ஏதோ மனிதன் கொண்டு வந்த பணத்தைபார்த்து, ஆம்! அவரது சேமிப்பு பணத்தை பார்த்து... கங்காணியாரிடம் பெண் கேட்க 'நீயா, நானா? என்று ஓடி வந்தார்கள்,

எப்படியோ மாதம் ஒன்றுக்குள் வரன் பார்த்து பெண்களுக்கு திருமணத்தை முடிந்து வைத்தார்.

**ம. கை. நேசன்**

தன் அண்ணன் மகன் சொன்னான் என்று நிலம்ஒன்று வாங்கினார். வாங்கியப்பின்தான் தெரிந்தது அந்த நிலம் சல்லிக்காசுக்கும் உதவாதென்று. பணம் எல்லாம் கரைய..., தன் மனைவியின் நகைகளை காலி பண்ணினார்.

அதன்பின் தன் அண்ணன் மகளை தேடத் தொடங்கினார் அவன் தான் காசில்லாதவன் வாழ்க்கையில் நுழையக் கூடாது என்று . . . தன் பெரியப்பாவை பார்க்க வருவதே இல்லையே. . . !

(9ம் பக்கம் பார்க்க)

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

காலம் கடும் வேகத்தில் பறந்தன . . . கங்காணியார் தொழிலின்றி கஷ்ட ஜீவனத்துக்கு தள்ளப்பட்டார். வாழ்க்கை சக்கரம் ஓட மறுக்கவும்....! பாஸ்போட்; குடும்பகார்டு; சகிதம் 'மாவட்ட மறு வாழ்வு ஆட்சியாளரை அணுகினார். அங்கு மனுக்கள் பெறப்பட்டன; விசாரணைகள் நடைபெற்றன. காலந்தான் பறந்தனவே தவிர மறுவாழ்வு உதவி லோன் கிடைக்கவில்லை எத்தனையோ நாள் பட்டினியாக அந்த அலுவலகத்தின் வராந்தாவிலேயே காலத்தை கடத்தினார்.

இவரை புரிந்து கொண்டோ என்னமோ புரோக்கர் பொன்னுசாமி இவரை அணுகினார். "லோன் தானே உங்களுக்கு வேண்டும்! நான் சொல்லியபடி செய்யுங்க!" என்று பாஸ் போர்ட்; குடும்ப கார்ட் ஆகியவைகளின் எண்களை பெற்றுக் கொண்டு பறந்தார் மாதங்கள் கூட இல்லை பத்தே நாட்களில் லோன் பாசாகியது. "லோன்" பாசாகி விட்டது என்றவுடன், கங்காணியார் புரோக்கர் பொன்னுசாமியை தெய்வமாக நினைந்து கையெடுத்து கும்பிட்டார்,

அந்த திங்கட்கிழமை கங்காணியார் அந்த இரண்டாயிரம் லோனை கையில் வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டார். "யோவ் கங்காணி பணத்தை இங்கே கொண்டாய்யா ?" என்று பொன்னுசாமி உரிமையோடு பறித்துக் கொண்டார். அதில் முக்கால் வாசி கமிஷன் போக....மிகுதி 'ஐந்நூறு' கங்காணியார் கைகளுக்கு சென்றது அது வீட்டு எடுத்து செல்வதற்குள் . . . கடன்காரர்கள் பிய்த்துக் கொண்டார்கள்.

அன்று வந்து படுக்கையில் வீழ்ந்த கங்காணியார்தான்,.. இன்று அந்த கம்பீர மீசையை இழந்து...செயலிழந்து,... இந்த நாட்டின் ஓரத்தில்... ஒதுங்கி கிடக்கின்றார். இப்படி எத்தனை கங்காணிகளோ...! ○

# கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டின்... கடும்புலி வாழும் காடு நன்றே!

இப்பொழுதெல்லாம் நாட்டில் வாழ்வதை விட காட்டில் வாழ்வதே மேல் என்று மக்கள் நம்பி வருகிறார்கள். இலங்கையில் சிங்களப்படைகளின் கொடுமைகளுக்கஞ்சி காட்டுக்கு ஓடிவிடுவது பல்லாயிரக்கணக்கான தமிழர்களுக்கு பழகிப் போய்விட்டது. இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்ட லட்சக்கணக்கான 'மலையகத் தமிழர்களும்' தமிழகத்தின் பல மாவட்டங்களில் ஆட்சியாளர்கள் கையிலும் தரகர்கள் கையிலும் சிக்கி, நலிந்து வாடி, கொடுங்கோன்மை தாளாமல் கொடைக்கானல் காடுகளுக்கும், நீலகிரிக் காடுகளுக்கும் வால்ப்பாறை, ஆனமலைக் காடுகளுக்கும் ஓடி காட்டை நம்பி வாழ்கிறார்கள். நாட்டில் இழந்த வாழ்வை, ஏதோ காட்டில் பெறுகிறார்கள்.

இவர்களுக்கெல்லாம் கொடுங்கோல் ஆட்சியாளர்களின் நாட்டைவிட கடும் புலி வாழும் காடு நன்றாகி விட்டது செப்டம்பர் 24ந் தேதி 'இந்து' நாளிதழின் முன் பக்கத்தில் இப்படி ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது-

ராஜஸ்தான் மாநிலத்தில் புகழ் பெற்ற சரணாலயம் ஒன்று இருக்கிறது. அது பாதுகாக்கப்பட்ட தேசியக்காட்டுப் பூங்கா. அதற்குப் பெயர் ரன்தாம்போர் தேசிய சரணாலயம் என்பதாகும். அதற்கு அருகே இருந்த கிராமங்களில் மழையில்லை; நீரில்லை. மக்களையும் கால்நடைகளையும் வரட்சி பாதித்தது. ஆட்சியாளர்களால் நிவாரணம் வழங்க முடியாத காரணத்தால், மாவட்ட ஆட்சியாளர் பீ.டி. மொகாந்தி என்பவர், கிராமவாசிகளின் கால்நடைகளை காட்டிலுள்ள புல்வெளிகளில் மேய்த்துக் கொள்வதற்கு அனுமதி வழங்கினார். அதனடிப்படையில், நூற்றுக்கணக்கான கிராமவாசிகளும், ஏறக்குறைய 15,000 கால் நடைகளும் ரன்தோம்போர் சரணாலயத்தின் குடியேறிவிட்டார்கள்.

ஆட்சியாளர் முன்னர் கொடுத்த அனுமதியை ரத்து செய்துள்ளார். ஆயுதந் தாங்கிய காவல் படையினரும், வனப்பகுதி பாதுகாவலர்களும் 'மக்களை' விரட்ட முயன்றனர் மக்கள் காட்டின் மையப் பகுதிக்குச் சென்று மரங்களை வெட்டி தம்மை அரண் செய்து கொண்டு எதிர்ச்சண்டை செய்கிறார்கள். காவலர்கள் பின் வாங்கினர்.

இச்சரணாலயம் புலிகள் பாதுகாப்பிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இக்காட்டில் 45 புலிகளும், 4,500க்குட்பட்ட வன விலங்குகளும், எண்ணற்ற பறவைகளும் வாழ்வதாகக் கணக்கெடுக்கப்பட்டுள்ளது, வனப் பாதுகாப்பு அதிகாரிகளுக்கும் கிராமவாசிகளுக்கும் இடையே அடிக்கடி சச்சரவுகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது!

**'பிறைசூடி'**

இச்செய்தி முக்கியமானது சிந்தனைக்குரியது. வனவிலங்குகளுக்கும், கடும்புலிகளுக்கும் கொடுக்கின்ற பாதுகாப்பை சாதாரண மக்களுக்குக்கொடுக்க அரசு தவறிவிடுகிறது. நாட்டில் வாழ முடியாத காரணத்தால் தானே மக்கள் புலிகள் உறையும் காட்டிற்குள் நுழைந்தார்கள்? அவர்களின் அடிப்படைத் தேவைகளை குடிநீர், மேய்ச்சல் நிலம் போன்றவைகளை வழங்க முடியாத காரணத்தால்தான், மக்கள் நாடு விட்டு காடுசெல்கிறார்கள். காட்டிற்குள் நுழைந்த மக்களை விரட்ட ஆயுதந்தாங்குகிறார் காவலர்கள். வறட்சியால் மக்கள் காட்டிற்குத் துரத்தப்படுகிறார்கள் - அங்கிருந்து அவர்களைத் துப்பாக்கி முனையில் மீண்டும் வரட்சிக்கு விரட்டுகிறது ஆட்சி! இன்றைய கொடுங்கோன்மை நாட்டோடு நின்று விடுவதில்லை. காட்டிற்கும் தொடர்கிறது!

ஆனால் வனப்பாதுகாப்பு பற்றியும், சூழல் பாதுகாப்பு பற்றியும் இப்பொழுது நிறையப் பேசப்படுகிறது இந்த வனமழிக்கும் சூழ்நிலையை வகுத்தவர்கள் யார்? மக்கள் வாழ வழிக்கும் பொருளாதாரச் சூழ்நிலை நாட்டில் நிலவுவதால் தான், மக்கள் காடழித்து வாழ வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகிறது.

நீலகிரி மாவட்டத்தில் சடலூர், கொளப்பள்ளி, முதுமலை ஆகிய பகுதிகளில் என்ன நடக்கிறது?

வாழவேறு வழியின்றி துடிக்கிற ஏழைமக்கள் காடுசென்று விறகு வெட்டி விற்றுத்தான் வாழவேண்டிய நிர்ப்பந்தம். இவர்களில் பெரும்பாலானோர் தாயகம் திரும்பிய மக்கள். காடுகள் தான் இவர்களுக்குத் தஞ்சம் ஆனால் நீலகிரிமாவட்டத்தில் காடு பாதுகாப்பும் சூழல் பாதுகாப்பு என்று கோஷம்போடும் கூட்டங்களுக்கு மக்கள் பாதுகாப்பு தரத்தெரியவில்லை மரப் பாதுகாப்பு பற்றி பேசமட்டும் தெரிகிறது. யாருக்கும் சொந்தமின்றிக் கிடக்கும் புறம்போக்கு நிலங்களில் பணக்காரர்கள் பயிர் செய்து கொழுப்பதை ஆட்சி கண்டு கொள்வதே இல்லை. கைக்கூலி அவர்களின் கண்களை மறைக்கிறதோ தெரியவில்லை. ஆனால் தாயகம் திரும்பிய தரித்திரர்கள் குடிசைகள் போட்டால் அவற்றைக் கொழுத்திக் கொக்கரிக்கிறது, அதிகார்வர்க்கம். இந்தக் கொடுங்கோன்மை நடைபெற்று வருகிறது வீட்டுக் கடன் மறுக்கப் படுகிறது அரசுகொடு

(11-ம் பக்கம் பார்க்க)

# தோட்டப் புறத்து (நாட்டுப்) பாடல்களில் காதல் சுவை

## (2)

ஆணும், பெண்ணும் ஒருவர் மீது ஒருவர் காதல் வயப்பட்டு விட்டால் போதும் தமது காதலை தெரிவிக்க படுகிற பாடு!

தன் காதலைத் தெரிவித்து மறுத்து விட்டால்..? முகத்திலே கரியை பூசிக் கொள்ளக் கூடாது மரியாதை கெட்டு விடும். ஆகவே நேரிடையாக தனது கருத்தை காதலைத் தெரிவிக்க முடியாது. எனவே முதலில் சாடையில் ஆரம்பிக்கிறது.

அவனுக்கு அவள் மீது காதல் தன் எண்ணத்தை வெளியிட வேண்டும் சாடையிலே ஆரம்பிக்கிறான்—

''பச்சை வடம் கட்டி
பணிய லயம் போற குட்டி
எட்டு சதக் கொய்யாப் பழம்
என்னை மறந்துடாதே''

அவள் கட்டி இருக்கிற இருக்கிற சீலையை குறித்தால் அவளுக்கு புரியும். சும்மா சொன்னால் போதாதே. கொய்யாப் பழமாக வர்ணிக்கிறான். உள்ளத்தில் அவளை நினைக்கும் போது ஏற்படும் இனிமையை சுட்டுகிறான். தன் நினைவில் இனிமையை ஏற்படுத்தும் அவளை 'தன்னை மறக்க வேண்டாம்' நினைவுறுத்துகிறான்.

அவளுக்கு அவன் மீது ஒரு கண்; தன் எண்ணத்தை சாடையாக வெளிப்படுத்த நினைத்த அவள் ஒருபடிமேலேயே போய் விடுகிறாள்.

அவனோ எப்போது 'மைனர்' போல நடந்துக் கொள்வான். விதவிதமாக கழுத்திலேயே கைக்குட்டை (லேஞ்சி-கர்சிப்) சுற்றிக் கொள்வான். அதைச் சுட்டிக்காட்டியே அவனை கேலி செய்வது போல பேச முயல்கிறாள்-

''கண்டி கருப்பு லேஞ்சி
ம்பளத்து சாய லேஞ்சி
புசல்லா புள்ளிலேஞ்சி
பொழுத மறைக்குதடி''

மேலும்—அவனது நடவடிக்கைகளை சுட்டிக்காட்டி கேலியும் செய்கிறாள் அவன் எங்கே போவான், எங்கே தங்குவான் எங்கெல்லாம் நின்று காலத்தை வீணடிப்பான் என்பதை சாடையிலே சொல்கிறாள் -

''தகரக்கடை இருக்கு
தங்கிப்போக வீடிருக்கு
மீனுக்கடை யோரத்திலே
மின்னுதய்யா சருகலேஞ்சி''

மழை பெய்து ஓய்கிறது அந்த மழையில் அவள் நனைந்து விடுகிறாள் ஆனாலும் பெய்த மழை போதவில்லை. அவள் பொட்டும் கரையவில்லை

''பொட்டு மேலே பொட்டு வச்சு
பொட்டலிலே போறத் தங்கம்
பொட்டலிலே பெஞ்ச தண்ணி-உன்
பொட்டுறுக பெய்யலிலே''

தன்னுள்ளத்தைக் கொள்ளை கொண்டவளை கண்டு வெகு காலமாகி விட்டது. ஒரு நாள் அவளை எதிர் கொள்கிறான் -

''உச்சிதாம் பூவே-உசக்க
இருக்கும் தாளம் பூவே
கண்ணுவலிப்பூவே-உன்ன
கண்டு வெகுநாளாச்சே''

அவள் ஆற்றங்கரை ஓரத்தில் இருக்கிற 'லயத்'தில் இருக்கிறாள். அன்னக்கிளி, பொன், தங்கம் போன்றவளை எத்தனைக் காலத்திற்கு தான் பார்த்து ஏங்குவது? அவள் பார்வை ஒரு நாளாவது தன் மீது படவே இல்லையே?

''ஆத்து லயத்து பொண்ணே
அன்னக்கிளி பொன்னு தங்கம்
என்மேலே கோவம் என்ன?
என்முகத்த பாத்தா என்ன?''

அவள் மீதுள்ள மயக்கத்திலே எதுவுமே பிடிக்கவில்லை. போட்ட வெற்றிலை வைத்த சந்தனப் பொட்டும் பிடிக்கவில்லை. அது மட்டுமல்ல- அவள் கொண்டையிலே வைத்திருக்கிறஅரளிப்பூக் கொண்டை கூட அவனுக்கு பிடிக்கவில்லை, அவள் நடந்துப்போவதும் அவன் மனசுக்கு பிடிக்கவில்லை-

''வாட வெத்தில வதங்க வத்தில
வாய்க்கு நல்லாலே
நேத்து வச்ச சந்தனப் பொட்டு
நெத்திக்கு நல்லால்லே
குருவி கொத்தின அரளிபூவூ
கொண்டைக்கு நல்லாலே—என்
குயிலு நடந்து போறபோக்கு
மனசுக்கு நல்லால்லே',

## 'தேனூரன்'

அவன் மனசுமட்டுமா? அவளுடைய மனசும்தான்-

'' ............... ........
குருவிக் கொத்தின அரளிப்பூவூ
கொண்டைக்கு நல்லால்லே
மாமன் வந்து தோப்பு நிக்குறது
மனசுக்கு நல்லால்லே''

அவனுக்கோ பொறுக்கவில்லை; எப்படியேனும் அவளிடம் தனது காதலை வெளிப்படுத்தி கூட வேண்டும்— கூடி வாழ வேண்டும், தெரிவிக்கின்றான்.

''மஞ்சள் மினுக்கியடி
மயிரெல்லாம் பூமினுக்கி
கொண்டை மினுக்குயடி-ஒன்னை
கொண்டு போறேன் தொங்க தோட்டம்''

அவனோ மனதைப் பறிகொடுத்து விட்டான். அதுவோ நிலையில்லாதது என்பது அவனுக்கு தெரியும் இருந்தாலும் அவன் மனம் உருகுகிறான்-

''ஓடுற தண்ணியில
ஆடுற பம்பரமே
பம்பரத்தே நம்பியல்லோ
வெம்புறுவா ஏங்குரன்டி''

தன்னை மயக்குகின்ற அவள் முன்னே செல்கிறான். எண்ணெய் தலை முழுகியிருக்கிறாள் மினுமினுக்கும் அவளுடைய தலை முடி காற்றில் பறந்து பின்னோக்கி பறக்கிறது. அது அவனுக்கு சாடை பேச உதவுகிறது

''எண்ணெய் தலை முழுகி
எனக்கு முன்னே போற பொண்ணே!
எண்ணெய் மயிருவந்து
என் கண்ண மறைக்குதடி''

(தொடரும்)

## சேவா அமைப்பு...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் அனாதைகளாக விடப்படும் இவர்கள், பலருக்கு பகடைக்காய்களாக போகும் துர்ப்பாக்கிய நிலைமையே தொடரும்.

வாழ்வைத் தேடி, இவர்கள் கொத்தடிமைகளாக, கொடுமையான வாழ்வுக்கு தள்ளப்படுவதையும் தடுக்க முடியாமல் போய்விடும்.

எனவே, இவர்களது நலத்தையே கருத்தில் கொண்டு, தமது சொந்த லாபநட்ட சுய நலங்களை மனத்தில் கொள்ளாதது, சொந்த பிரச்சனைகளை ஒருபுறம் ஒதுக்கி ஒன்றிணைய வேண்டும். ஒன்றிணைவதன், தேவையையும் ஒருமித்த குரல் எழுப்பவேண்டியதன் அவசியத்தை உணர வேண்டும்.

ஒன்றிணைவதன் தேவையையும், ஒருமித்த குரல் எழுப்ப வேண்டியதன் அவசியத்தையும் உணர வேண்டும்.

தங்களது ஒருங்கிணைவுக்கு எது தடையாக இருக்கிறதோ அதை களைய முற்பட வேண்டும். பரஸ்பரத்தையும் நட்புறவையும், ஒத்துழைப்பையும் ஏற்படுத்தும் வகையில் தங்கள் வேலை திட்டங்களை வகுத்துக்கொள்ள வேண்டும்-ஒழுங்குப் படுத்திக் கொள்ள வேண்டும் - இது தங்கள் அமைப்பின் பணிகள் தடைபடாமல் இருக்க - சீராக நடக்க.

அதன் மூலம் ஒரு சரியான இணைப்பு ஏற்படவும் உதவியாக இருக்கும்.

ஒருங்கிணைப்பு கூட்டு முயற்சியைப் பொறுத்த வரை பொதுவான கொள்கைகளை வகுக்கவும் - வேலை திட்டங்கள ஏற்படுத்தவும் செய்து செயல்பட முனைய வேண்டும்.

இந்த ஒருங்கிணைப்பு தாயகம் திரும்பியோர் பிரச்சனைகளுக்கு ஒன்று பட்ட குரல் கொடுக்க உதவ வேண்டும்.

-இத்தனை காலம் இருந்த செயல் முறையில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

கூட்டம் கூட்டுவது கருத்தரங்கு ஏற்படுத்துவது, ஆய்வு செய்வது அறிக்கை விடுவது, கோரிக்கை என்ற மட்டத்தோடு நின்றுவிடக் கூடாது.

நமது கோரிக்கைகளை அரசு புரிகிற வண்ணம் - செவிசாய்க்கிற வண்ணம் - பிரச்சனைக்கு முக்கியத்துவம் ஏற்படுத்த வேண்டும்,

தாயகம் திரும்பியோர்களில் பலதரப்பட்ட தொழிலாளர்கள் - பாட்டாளிகள் - தொழில் புரிவோர் இருக்கிறார்கள். இவர்கள் சம்பந்தப்பட்டவர்களோடு இணைந்துப் போராடும் வகையில் ஆதரவு திரட்ட வேண்டும்.

நமது பிரச்சனையை அரசியல் மயப்படுத்த வேண்டும்.

தாயகம் திரும்பியோர் பிரச்சனை எல்லா மட்டத்திலும் எடுபடும் வகையில் பிரச்சாரம் செய்ய வேண்டும்.

—உள்ளூர் தொழிற் சங்க, சமூகநல அமைப்புகளின் ஆதரவைத் திரட்ட வேண்டும்.

—இவைகளில் ஆதரவோடு அரசை உலுக்கும் - குலுக்கும் ஒரு போராட்ட வடிவம் கொடுக்க வேண்டும்,

அப்போதுதான் மாற்றங்கள் தோன்றவும் - அரசு லட்சியம் செய்யவும், தாயகம் திரும்பியோர் பிரச்சனை தீரவும் வழி பிறக்கும்.

## கொடுங்கோல்...

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

க்கும் புனர் வாழ்வு உதவிகள் சுரண்டப்படுகின்றன. சுயமுயற்சியால் குடிசைகள் போட்டால், அவை கொளுத்தப்படுகின்றன. இந்தக் கொடுங்கோன்மையினின்று தப்பி, காட்டுக்குச் சென்றால், அதற்கும் தடை; தண்டனை.

ஐயகோ! மக்கள் பாதுகாப்புக்கு இடமெங்கே? புலிகள் வாழவோ இடமுண்டு இந்திய ஜனநாயகமே மக்களை மறந்த சூழல் பாதுகாப்பு யாருக்காக?

# அகதிகள் வருகை

வன்செயலில் பாதிக்கப் இலங்கையிலிருந்து அகதிகள் வருவது தொகை நாளுக்கு நாள் குறைந்து விட்டது. தற்போது மாதம் 5 பேரிலிருந்து 10 பேருக்கு உட்பட்டவர்களே வருகிறார்கள். இவ்வாறு மறுவாழ்வு மற்றும் வேலை வாய்ப்புத்துறை அமைச்சர் டி இராமசாமி திருச்சியில் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

இதுவரை வந்துள்ள அகதிகள் 1,25 லட்சம் பேர் வரையாகும். இவர்களில் 132 அகதிகள் முகாம்களில் தங்கி இருக்கிறார்கள். O

## அகதிகளுக்கு உதவி

திருச்சி ஒய்.எம்.சி.ஏ., அகதிகளுக்கு விளையாட்டுப் பொருட்களை வழங்கி உதவியது.

திருச்சி கொட்டப் பட்டு முகாமில் இருக்கும் இலங்கை அகதிகள் இளைஞர்களுக்கு விளையாட்டுப் பொருட்களை திருச்சி 17, ஒய்.எம்.சி,ஏ., வழங்கியது.

8-9-86 அன்று அளிக்கப் பட்ட பொருட்களை அகதிகள் சார்பில் எஸ். எம். காந்தி பெற்றுக் கொண்டார். O

மக்களை மீறி வனப்பாதுகாப்பு நிலைக்க முடியுமா?

ராஜஸ்தான் கிராமவாசிகள் சூழல் பாதுகாப்பு வனப்பாதுகாப்பு மக்களின் சமுதாயச்சூழலை மீறி அமைய முடியாது என்று எச்சரித்திருக்கிறார்கள். நாளைக்கு இதே நிலைக்கு நீலகிரி மாவட்டத்தில்வாழும் தாயகம் திரும்பிய மக்கள் தள்ளப் படலாம். ஆகவே தாயகம் திரும்பியோருக்கு பட்டா வழங்கத் தொடர்ந்து மறுத்து வரும் அரசுக்கு இச்செய்தி எச்சரிக்கையாக அமையும் என்று நம்புகிறோம்.

மக்கள் சீற்றம், புலியின் சீற்றத்தை விடக் கொடியது! O

## ஓர் வேண்டுகோள்

சுமார் 300 ஆதரவற்ற குழந்தைகளுக்கு இலவச உணவு, உடை, இருக்க இருப்பிடம், கல்வி அளித்து வரும், சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம் ஆண்டு தோறும் தீபாவளி அன்று குழந்தைகளுக்கு புத்தாடை, பட்டாசுகள், இனிப்புகள் வழங்கி தீபாவளியை சிறப்பாக கொண்டாட பொதுமக்கள் பல உதவியோ அல்லது பொருளுதவியோ கொடுத்து உதவும்படி மேற்படி ஆசிரமம் கேட்டுக் கொள்கிறது.

ஆதரவற்ற குழந்தைகளுக்கும் ஆசிரமத்திலிருக்கும் முதியோர் இல்லத்தில் ஆதரவற்ற முதியோர்களும், இல்லக் குழந்தைகளும் மன மகிழ்ச்சியுடன் தீபாவளி திருநாளைக் கொண்டாட பொதுமக்கள் அளிக்க விரும்பும் நன்கொடை பணம், பொருள் எதுவாக இருந்தாலும் அக் குழந்தையின் நலனை முன்னிட்டு ஏற்றுக் கொள்ளப் படும்.

பொதுமக்கள் தங்களால் இயன்ற உதவிய பணம் அல்லது பொருட்களாக நிர்வாகி, "சிவானந்த சரஸ்வதி சேவாஸ்ரமம், நெ. 20, காமர் தெரு, கிழக்கு தாம்பரம், சென்னை - 600 059 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறோம். O

Editor & Publisher: T. S. RAJU, 1, South Gangai amman koil 2nd Street, Madras-600 094. Printed: L S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-24.

Regd. No. R. N. 42556/83 Regd. No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்பு முகவரி:
அஞ்சல் பை எண். 5560
சென்னை-600 094

# விண்ணப்பித்தோ 16 ஆண்டுகள் வியாபாரக் கடன் கிடைத்தது பாதிதான்!

**1970ல் வியாபாரக் கடனுக்கு விண்ணப்பித்தும் இன்னமும் முழுக்கடனையும் என்னால் பெற முடியவில்லை-''**

என்கிறார் புதுக் கோட்டை மாவட்டம் கீழப்பட்டா, மாங்கோட்டைக் கிராமத்தைச்சேர்ந்த மாணிக்கம் என்ற தாயகம் திரும்பியோர்,

அவர் தெரிவிப்பதாவது-

நான் வியாபாரக்கடனுக்காக 1970யில் விண்ணப்பித்தேன் 10 ஆண்டு கழித்துத்தான் 1980 யில் முதல் தவணையாக ரூபா 3000/- |பெற்றேன்.

1985 யில் தான் வீட்டுக்கடன் கிடைத்தது. ரூபா 3800/- பெற்றேன் பின்னர் 1200/- பெற்றேன்.

வியாபாரக்கடனில் இன்னும் 2 வதுத் தவணைக்கடன் கிடைக்க வில்லை, நான் கடனுக்கு விண்ணப்பித்து 16 ஆண்டுகள் ஆகிறது இன்னும் முழுமையாக எந்தக் கடனையும் வாங்க முடியவில்லை

கடைசியாக 21.11-83 அன்று விசாரணை நடந்தது நடந்ததோடு சரி ஒவ்வொரு வாரமும் திங்கள், வெள்ளி என்று வந்துக் கொண்டிருக்கிறேன்

நான் எனது ஊரிலிருந்து 16 மைல்கள் வர வேண்டும். பஸ் 2க்கு ரூபா 2-50 கட்டணம் ஒவ்வொரு வாரமும் ரூபா 15 - சிலவு செய்துக் கொண்டு வருகிறேன்.

வரும் போதெல்லாம் ஏதாவது சொல்கிறார்கள் ஏதாவது காரணம் காட்டி தட்டிக்கழிப்பது பொழுது போக்காகி விட்டது என்கிறார்.

இவரது கிராமத்தை சேர்ந்த பழனியாய் என்ற விதவை. இவரும் 1970யில் கடனுதவிக்கு விண்ணப்பித்தவர்- கணவர் உயிரோடு இருக்கும் போது. இதுவரை ரூபா 1200/- மட்டுமே பெற்றுள்ளார்.

O

# 'வாக்குறுதியை நிறைவேற்ற-வில்லை'

கொடைக்கானலில் அடிமைத் தளையிலிருந்து மீட்கப்பட்ட 157 குடும்பங்களுக்கு தமிழக அரசு ஒப்புக்கொண்டபடி நிவாரண உதவிகளைச் செய்ய வில்லை என்றும், ஆயிரம் ஏக்கர் நிலத்தை அவர்களுக்கென ஒதுக்கி மறுவாழ்வு தருவதாக சுப்ரீம் கோர்ட்டிடம் அளித்த வாக்குறுதியை இன்னமும் நிறைவேற்றவில்லை என்றும் சுவாமி அக்னிவேஷ் குற்றம் சாட்டியுள்ளார். இதற்காக தமிழ்நாடு அரசு மீது கோர்ட் அவமதிப்பு வழக்கைத் தொடரப் போவதாக அவர் அறிவித்துள்ளார்.

கொத்தடிமைகள் மீட்புக்கான அகில இந்திய இயக்கத் தலைவரும் ஜனதா தலைவருமான சுவாமி அக்னிவேஷ் அகில இந்திய பாதயாத்திரையை மேற் கொண்டுள்ளார்.

நாடு முழுவதும் 50 லட்சம் பேர் கொத்தடிமைகளாக இருப்பதாகவும் தமிழ் நாட்டில்தான் இந்த எண்ணிக்கை அதிகம் என்றும் தெரிவித்தார்.

O

# குர்னிகால்சிங்க்கு பதவி உயர்வு

கொடைக்கானல் சப் கலெக்டர் குர்னிகால்சிங்குக்கு அண்ணா மாவட்ட கூடுதல் கலெக்டராக பதவி உயர்வு அளிக்கப் பட்டுள்ளது.

கொடைக் கானலில் இலங்கைத் தமிழர்கள் கொத்தடிமைகளாக நடத்தப்படுவதை வெளியுலகுக்கு எடுத்துக் காட்டியவர் சப்-கலெக்டர் குர்னிகால் சிங்.

இதற்கிடையில் சீக்கிய தீவிரவாதிகளுக்கு ஆதரவளித்ததாக இவரது தம்பி யாதவீந்தர்சிங் கைது செய்யப்பட்டார்.

இந்த சம்பவம் பெரும் பரபரப்பை உண்டாக்கிக் கொண்டிருக்கும் சமயத்தில் குர்னிங்கால்சிங்கிற்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளது. இதற்கான உத்தரவை தமிழக அரசு பிறப்பித்துள்ளது.

இனிமேல் அண்ணா மாவட்ட கூடுதல் கலெக்டராக குர்னிங்கால்சிங் பணியாற்றுவார். ஆனால் இவரது தலைமையிடம் கொடைக்கானலில் தான் இருக்கும் என்பது குறிப்பிடத் தக்கது.

அண்ணா மாவட்ட கூடுதல் கலெக்டராக இருந்து வந்த சந்திரபிரகாஷ்சிங் மாறுதலாகி சென்றதை தொடர்ந்து அந்தப் பதவிக்கு குர்னிகால்சிங் நியமிக்கப்பட்டுள்ளார்.

O

# மக்கள் மறுவாழ்வு மன்ற புதியகிளை

நீலகிரி மாவட்டம், கோத்தகிரி காக்கா சோலையில் மக்கள் மறுவாழ்வு மன்றம் அமைக்கப்பட்டது. மன்ற நிர்வாகிகளாக கீழ் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு எம். ரவி, துணைத் தலைவர் திரு சுப்பையா செயலாளர் திரு சத்திவேல், துணைச் செயலாளர் மணிவேல், பொருளாளர் செல்வம்.

## செயற்குழு உறுப்பினர்கள்

திருவாளர்கள் கே. ராஜலிங்கம், டி. ராஜா, எஸ். விஜேசுந்தரம், ஏ. சந்திரன், பி. முனியாண்டி, கே. சுப்பிரமணி, எம். பாலு, வி. ராஜா கே. ராமன், விஜே, பெஞ்சமின், சிங்காரவேல், பொன்னுசாமி, ராசலிங்கம், நாகமுத்து, மகேந்திரன், நடராஜ், கணேஷ், தேவதாஸ், சௌந்தரராஜன், வி. ராஜா, ஆரோக்கியசாமி. O